சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை சேர்த்துக் கொள்வதற்காக நடாத்தப்படவுள்ள ஆசிரியர் போட்டிப் பரீட்சை - 2023



❒ சரியான விடையினை தெரிவு செய்க.

**01.** 2022ம் ஆண்டு மத்திய வங்கி ஆண்டறிக்கையின் சமூக நல குறிகாட்டியில் மொத்த தேசிய உற்பத்தியில் கல்விக்கான ஒதுக்கீட்டுக்கான சதவீதம் என்ன?

(1) 1.9 %　　(2) 1.5 %
(3) 1.7 %　　(4) 2.0 %

**02.** பௌத்த பிரிவேனா கல்விக்கு பொறுப்பாக காணப்படும் ராஜாங்க அமைச்சரின் பெயர் என்ன?

(1) செஹான் சேமசிங்க　　(2) கனக ஹேரத்
(3) விஜித பேருகொட　　(4) மொஹான் பிரியதர்ஷன

**03.** பின்வரும் பாடசாலை வகுதிக்குள் எவ்வகைப் பாடசாலைகள் இலங்கையில் அதிகமாக காணப்படும்.

(1) 1C பாடசாலைகள்　　(2) 1AB பாடசாலைகள்
(3) TYPE II பாடசாலைகள்　　(4) TYPE III பாடசாலைகள்

**04.** சர்வதேச ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடணம் செய்யப்படுகின்ற உலக கல்வி தினத்தின் கருப்பொருள் என்ன?

(1) கல்வியில் முதலீடு செய்வது மக்களுக்கான முன்னுரிமைப்படுத்தலாகும்.
(2) அடிப்படைச் சுதந்திரமே கல்வியாகும்.
(3) குறைவிருத்தி நாடுகளின் கல்விக்காக முதலீடு செய்வோம்.
(4) அடிப்டைக் கல்வியை அபிவிருத்தி செய்வோம்.

**05.** அண்மையில் வெளியான க.பொ.த உயர்தர பெறுபேற்றின் படி பல்கலைக்கழக அனுமதிக்காக தகுதி பெற்றோர் சதவீதம்.

(1) 70.2%　　(2) 65.2%
(3) 63.3%　　(4) 68.1%

**06.** அரச பாடசாலை வகுதியான 1AB அவசர பணக்கையிருப்பு (சிறு நிதி வசக்கட்டு) எதிர் எவ்வளவு தொகையை வைத்திருக்க முடியும்?

(1) முப்பதாயிரம்　　(2) இருபத்தையாயிரம்
(3) பதினையாயிரம்　　(4) ஐயாயிரம்

**07.** கல்வியமைச்சின் மாணவர் பாராளுமன்ற சுற்றறிக்கையின் படி 1500 ற்கு உட்பட்ட மாணவர் தொகையினைக் கொண்ட பாடசாலை ஒன்றில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை.

(1) 94　　(2) 102
(3) 130　　(4) 138

www.gkiqmaster.com

**08.** 2023 உலகலாவிய சிறந்த மாணவர் விருதை வென்றவர்
(1) NHIAL DANG (2) IGRO KLYMENKO
(3) KHISHIYA THORPE (4) PETER MARTIN

**09.** பின்வருனவற்றுள் ஆசிரியர் ஒருவர் கடமை லீவைப் பெற முடியாத சந்தர்ப்பத்தை தெரிவு செய்க?
(1) அரச வழக்குகளில் சாட்சியாளராக நீதிமன்றம் செல்லுதல்.
(2) ஜுரி சபையில் கடமையாற்றுதல்.
(3) அரசாங்கப் பரீட்சை மேற்பார்வையாளராகக் கடமையாற்றுதல்.
(4) குடும்ப அங்கத்தவர்கள் சுகவீனமடைதல்.

**10.** இலங்கையில் சமாதானக் கல்வி வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் நிறுவனம்
(1) UNICEF
(2) UNESCO
(3) International Human Rights Commission
(4) German Technical Co-operation

**11.** சகலருக்கும் கல்வி மீதான உலகப் பிரகடனம் இடம்பெற்ற நாடு எது?
(1) தாய்லாந்து (2) இந்தியா
(3) பிரான்ஸ் (4) அமெரிக்கா

**12.** கற்றல் இயலாமையில் கணித இயலாமையைக் குறித்து நிற்பது
(1) Dyselexia (2) Dyscalculia
(3) Dysgraphia (4) Aphasia

**13.** இலங்கையில் முதன் முதலாக கண்பார்வை இல்லாதோருக்கான விசேட பாடசாலை அமைக்கப்பட்ட இடம்?
(1) பன்னிப்பிட்டிய (2) திஹாரிய
(3) இரத்மலான (4) கண்டி

**14.** உலகின் மிகப் பெரிய பல்கலைக்கழகம் பின்வருவனவற்றுள் எது?
(1) அல்லாமா இக்பால் பல்கலைக்கழகம் - பாகிஸ்தான்
(2) கலிபோர்னியா சமூக பல்கலைக்கழகம் - அமெரிக்கா
(3) இந்திராகாந்தி தேசிய பல்கலைக்கழகம் - இந்தியா
(4) அனடோலு தேசிய பல்கலைக்கழகம் - துருக்கி

**15.** கல்விப் புலத்தில் நீல அட்டை எனக் கருதப்படுவது எது?
(1) COVID-19 கால மாணவர்களுக்கான சுய கற்றல் வழிகாட்டி
(2) மீத்திறன் கொண்ட மாணவர்களை மேம்படுத்தும் விசேட செயலட்டை
(3) வினாப்பத்திரம் தயாரிக்கும் ஒரு விசேட திட்டம்
(4) மாணவர் அடைவினை அளவிடும் அடைவுப் பரீட்சை

**16.** கல்வி உளவியலின் தந்தை என அழைக்கப்படுபவர்?
(1) சிக்மன் ஃப்ரொய்ட் (2) எட்வர்ட்லி தோன்டைட்
(3) கார்ள் மாக்ஸ் (4) ஜுன் ஜக் ருஸோ

17. பின்வருவனவற்றில் பொருத்தமற்ற சோடியைத் தெரிவு செய்க?
(1) தேசிய கல்வி ஆணைக்குழு - லலித் அத்துலத் முதலி
(2) நிசங்க விஜயரட்ன - திறந்த பல்கலைக்கழகம்
(3) பொதுக்கல்விச் சீர்திருத்தம் - ரச்சர்ட் பத்திரன
(4) கல்வி அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகு - W.J.M.லொகு பண்டார

18. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது சர்வதேசப் பாடாலை எது?
(1) Overseas Children School
(2) Queen Elizebeth Children School
(3) American International School
(4) British International School

19. திறந்த பல்கலைக்கழகத்தை ஸ்தாபித்த முன்னாள் கல்வி அமைச்சர்.
(1) லலித் அத்துலத் முதலி
(2) ரணில் விக்கிரமசிங்க
(3) நிஸ்ஸங்க விஜேரட்ன
(4) டபிள்யூ. தஹநாயக்க

20. திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
(1) 2007
(2) 1989
(3) 2003
(4) 1994

21. கல்வி உளவியலாளர் பியாஜேயின் நியம சிந்தனைப் பருவம் எந்த வயதுப் பிரிவிற்குள் அடங்கும்.
(1) 7 - 12
(2) 12 - 15
(3) 1 - 2
(4) 2 - 7

22. அரச பரீட்சைகள் நடத்துவதை சட்டபூர்வமாக்குதல் மற்றும் ஒழுங்கமைத்தலை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட சட்டம்?
(1) 1972ம் ஆண்டின் 25ம் இலக்க பொதுப்பரீட்சைகள் சட்டம்
(2) 1968ம் ஆண்டின் 25ம் இலக்க பொதுப்பரீட்சைகள் சட்டம்
(3) 1992ம் ஆண்டின் 18ம் இலக்க பொதுப்பரீட்சைகள் சட்டம்
(4) 1979ம் ஆண்டின் 64ம் இலக்க பொதுப்பரீட்சைகள் சட்டம்

23. தனியார் பாடசாலை அரச பாடசாலைகளாகவும், அரச உதவி பெறும் பாடசாலைகளாகவும் அரசுடமையாக்கப்பட்ட வருடம்?
(1) 1961
(2) 1970
(3) 1943
(4) 1965

24. பண்டைய இலங்கையில் நிலவிய உள்நாட்டு கல்வி முறையின் அமைப்பில் சிற்றூர் பள்ளிகளிலும் கிராமியப் பள்ளிகளிலும் பாடநூல்களாகப் பயன்படுத்திய நூல்கள் சிலவற்றைப் பட்டியலிடுக?

..............................................................................................................................

25. சீன பௌத்த துறவியான **பாகியன்** தங்கியிருந்து பௌத்த துறவிகளுக்கு கல்வி புகட்டிய மத்திய கல்வி நிலையங்களின் பெயர்களைக் குறிப்பிடுக?

..............................................................................................................................

26. 412ம் ஆண்டு காலப்பகுதியில் பிரிவேணாக்கல்வி மறுமலர்ச்சியடைய துணை புரிந்த மன்னனின் பெயர் என்ன?

..............................................................................................................................

**27.** போர்த்துக்கேயர் 1505ம் ஆண்டு இலங்கைக் வருகை தந்து கல்வியியல் நடவடிக்கைகளில் குறிப்பாக வாசிப்பு, எழுத்து, கத்தோலிக்கப் போதனை போன்றவற்றை ஆரம்பிப்பதற்கு ஆதரவுக்கரம் நீட்டிய மன்னன் யார்?

.............................................................................................................................................

**28.** 2022 மத்திய வங்கி ஆண்டறிக்கைக்கேற்ப அரச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

.............................................................................................................................................

**29.** "கல்வியும் தத்துவமும் நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றதாகும்" இந்தக் கருத்தை முன்வைத்த கல்வியியலாளர்?

.............................................................................................................................................

**30.** திரிதரு கரிசர எனும் கல்வியமைச்சின் நிகழ்சித்திட்டம் எதன் பொருட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது?

.............................................................................................................................................

**31.** எமது நாட்டின் கல்வி அமைச்சுடன் இணைந்து இயங்கும் முக்கிய நிறுவனங்கள் சிலவற்றைப் பெயரிடுக?

.............................................................................................................................................

**32.** இலங்கையில் உயர்கல்வி அமைச்சு எப்போது உருவாக்கப்பட்டது?

.............................................................................................................................................

**33.** சார்க் பல்கலைக்கழகம் அமையப்பெற்ற நாடு எது?

.............................................................................................................................................

**34.** தெற்காசிய நாடுகளின் ஆசிரியர் பயிற்சி மையம் அமைந்துள்ள இலங்கையின் பிராந்தியம் எது?

.............................................................................................................................................

**35.** இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் கல்விச் செலவுகள் விரைந்து அதிகரிப்பதற்கான காரணிகள் எவை எனக் குறிப்பிடுக?

.............................................................................................................................................

**36.** உலக எழுத்தறிவு தினம் எப்போது அனுஷ்டிக்கப்படும்?

.............................................................................................................................................

**37.** உலக புத்தக தினம் எப்போது அனுஷ்டிக்கப்படும்?

.............................................................................................................................................

**38.** பார்வைத் திறன் இழந்தவர்களுக்காக வாசிப்பு, எழுத்துத் திறனை உருவாக்கிய கல்வியியலாளர் யார்?

.............................................................................................................................................

**39.** தேசிய கல்வி ஆணைக்குழுவின் அதிகாரங்கள் இரண்டு எழுதுக?

..........................................................................................................................................

**40.** மென்திறன்களின் முக்கிய மூன்று செயற்பாட்டு கூறுகளையும் விபரிக்குக?

..........................................................................................................................................

**41.** கலைத்திட்டம் தொடர்பாகவும் அதன் கட்டமைப்பு தொடர்பாகவும் சிறந்து விளங்கிய இரு கல்வியிலாளர்களைக் குறிப்பிடுக?

..........................................................................................................................................

**42.** பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் இயல்புகள் இரண்டைக் குறிப்பிடுக?

..........................................................................................................................................

**43.** இலங்கையில் முன்பிள்ளைப் பருவ கவனிப்பும் கல்வியும் தொடர்பான நிருவாக நடைமுறைகள் எந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது?

..........................................................................................................................................

**44.** தற்பொழுது நடைமுறையிலிருக்கும் பாடசாலை வசதிகள் சேவைகள் கட்டணம் எத்தனையாம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலம் நடைமுறைக்கு வந்தது.

..........................................................................................................................................

**45.** தற்போதைய கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் ஆணையாளர் யார்?

..........................................................................................................................................